# அனைத்துக்கும் அரசராம் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

அன்புடையீர்! இன்று நாம் கிறிஸ்து அரசர் பெருவிழாவினைக் கொண்டாடுகிறோம். பெருவிழா நல்வாழ்த்துக்கள்!

இயேசு மண்ணை ஆள வந்தவர் அன்று;

மாறாக மனதை ஆள வந்தவர்.

இந்த அரசர் படைகளைக் கொண்டு நாடுகளை வென்றவர் அல்ல,

போர்களினால் எதிரிகளை ஒழித்தவர் அல்ல,

கம்பீரமாக வலம் வந்து எல்லா சுகங்களையும்

அனுபவித்து மகிழ்ந்திருந்தவர் அல்ல.

மாறாக அரசர்களுக்கென இருந்த

வரையறைக்குள்ளேயே வராதவர்.

அவருடைய அரசு அன்பினால் ஆனது. இரக்கத்தையும், மன்னிப்பையும், கருணையையும் மையமாகக் கொண்டது. ஆனால் இயேசுவை அரசராகக் கொண்டாடும் இன்று, இயேசு பிலாத்தின் முன் நிறுத்தப்பட்டு, விசாரிக்கப்பட்ட நிகழ்வு, இயேசு எப்படிப்பட்ட அரசர் என்ற கேள்விக்கு, "கிறிஸ்துவின் ஆட்சி, இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" என்னும் பேருண்மையை புரிய வைக்கிறார் பிலாத்துவுக்கு.

இயேசுவின் அரசு உண்மைக்குச் சான்று பகரும் அரசு!

இறையாட்சியின் விழுமியங்களால் நிறைந்த சமத்துவ, சமூகநீதியின் அரசு!

மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்ட அரசு.

இன்று இருந்து நாளைக்கு காணாமல் போகும் அரசு அல்ல, மீட்பரின் அரசு.

அது நிலையானது அந்த அரசுக்கு என்றுமே முடிவு இராது.

இத்தகைய சிறப்புகளை உடைய அவரின் ஆட்சிக்கு நாம் தகுதியுடையவர்கள் ஆகிறோம் என்பதை உணர்ந்து அதற்கான வரங்களை வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு இணைவோம்.

### முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! இறைவன் கொடுங்கோல் மன்னன நை வீழ்த்தி தம் மக்களைச் சிறப்புறச் செய்வார். அவரது ஆட்சியை மானிட மகனுக்குக் கொடுக்கப்படும். இது முடிவில்லா அரசாக அமையும் எனக் கூறும் இறைவாக்கினர் தானியேல் நூலின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! கிறிஸ்துவே உண்மையான அரசர். இறந்தோருள் முதலில் உயிர்பெற்று எழுந்தவர் அவரே. அவரே மண்ணுலக அரசருக்கெல்லாம்

தலைவர். அவருடைய அரசு எப்படி இருக்கும் என்பதைக் கூறும் திருத்தூதர் யோவான் எழுதிய திருவெளிப்பாட்டு நூலின் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்:**

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், திருத்தொண்டர் மற்றும் பொதுநிலையினர் இடையேயான உறவு ஆயன் - மந்தை என்ற அன்பின் அடிப்படையில் அமைத்து, இறையரசு மலரத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் அரசரே எம் இறைவா! எம் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் உம்மைப் போன்று மக்களைத் தேடிச் சென்று, திடப்படுத்தி, சரியான பாதையில் மக்களை வழிநடத்த தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நற்செய்தியின் ஒளியே எம் இறைவா! இன்று உலகில் நிலவும் சுயநலம், ஆணவம், அகந்தை, செருக்கு போன்றவைகள் அழிந்து, இறையரசின் மதிப்பீடுகளால் மக்கள் தங்களை அணிசெய்து கொள்ள வரமருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. நல்ல ஆயனே எம் இறைவா! எம் பங்கில் உள்ள சிறுவர், இளையோர் இவ்வுலக வாழ்வின் நவீன அறிவியல் வளர்ச்சியின் மாயைகளில் சிக்கி, சிதறுண்டு தவிக்கும் இவ்வேளையில் உம் இறைவார்த்தை அவர்களுக்கு உறுதுணை என்பதை அறியும் வரத்தையும் இறை அச்சத்தையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; +91 843 802 1938; www.arulvakku.com